*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி - சென்னை - 4*
*30 08 2025 SATURDAY 6 45 AM*
***வணக்கம்-மாநில செய்திகள்***

***தலைப்புச் செய்திகள்***

- *அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவில் ஜப்பான் கணிசமான அளவிற்கு முதலீடுகளை மேற்கொள்ளும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

- *உணவு உற்பத்தியில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

- *தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.*

- *வரும் திங்கட்கிழமை முதல், விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படவுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.*

- *17 வயதுக்குபட்டோருக்கான தெற்காசிய மகளிர் இளையோர் கால்பந்து போட்டியில் இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.*

*<<<<<<>>>>>>>>*

*இந்தியா – ஜப்பான் இடையே, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் உத்திசார் ஒத்துழைப்பை மேலும் பத்தாண்டுகளுக்கு விரிவுபடுத்தும் திட்டத்தை இருநாடுகளின் பிரதமர்கள் வெளியிட்டுள்ளனர்.*

*ஜப்பானில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, டோக்கியோவில் நேற்று அந்நாட்டு பிரதமர் திரு. Shigeru Ishiba-வை சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்தினார்.*

*இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளையும், பல்வேறு துறைகளில் உள்ள ஒத்துழைப்பையும் இரு தலைவர்களும் விரிவாக ஆய்வு செய்ததாகவும், தற்போதுள்ள உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இருவரும் ஒப்புக் கொண்டதாகவும், சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.*

*முதலீடு, புத்தொழில், சுற்றுச்சூழல், தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்தவும் இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.*

*இதற்காக, அடுத்த பத்தாண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இருநாடுகளும் வகுத்துள்ளதாக செய்தியாளர் சந்திப்பில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.*

*அடுத்த பத்தாண்டுகளில் இந்தியாவில் ஜப்பான் கணிசமான அளவிற்கு முதலீடுகளை மேற்கொள்ளவும் ஒப்புக் கொண்டுள்ளது.*

*செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பராமரிப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைத்து செயல்படவும், இந்த துறைகளில் இருநாடுகளைச் சேர்ந்த சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை இணைக்கவும் இந்த பேச்சுவார்த்தையின் போது ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*உலக சந்தைக்கான பொருட்களை, ஜப்பானிய நிறுவனங்கள் இந்தியாவில் தயாரிக்க முன்வர வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*<<<<<<>>>>>>>*

*கனிம வளங்கள் குறித்து இந்திய சுரங்கத்துறை மற்றும் ஜப்பானின் பொருளாதார மற்றும் தொழில்துறை இடையே ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி வரவேற்றுள்ளார்.*

*2070ஆம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை குறைக்கும் இலக்கை எட்டுவதற்கும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பிற்கும் இந்த ஒப்பந்தம் பயன்படும் என்று சமூகவலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*ஜப்பானில் இருநாடுகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, ஆழ்கடல் சுரங்கம் மற்றும் முக்கியமான கனிமங்களை சேமித்து வைத்தல் ஆகியவை தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ளவும், இதுகுறித்த கொள்கைகளை வகுக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த முடிவு, சுரங்கத் துறையில் முதலீடுகளை அதிகரிக்க பயன்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<<<>>>>>>>*

*உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*மைசூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர். இந்தியா தற்போது தனது தேவைகளுக்கு மட்டுமல்லாமல், உலகில் உள்ள பிற நாடுகளுக்கும் உணவு அளிக்கும் வகையில், உற்பத்தியில் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாக கூறினார்.*

*நாட்டு மக்கள் அனைவரும், உள்ளூரில் தயாரிப்புகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*சிறு விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சமாளிக்கவும், விவசாயம் மூலம் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்ற நிலையை உருவாக்கவும் அரசு முயற்சித்து வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.*

<<<<<<>>>>>>>>

*தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.*

*இன்றிரவு ஜெர்மனி சென்றடையும் முதலமைச்சர், நாளை முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளார்.*

*ஜெர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு, வரும் திங்கட்கிழமை இங்கிலாந்து தலைநகர் லண்டன் செல்லவுள்ள முதலமைச்சர், மறுநாள் கேம்பிரிட்ஜ் பல்லைக் கழகத்தில் தொழில் முனைவோர்களை சந்தித்து பேசவுள்ளார்.*

*லண்டனில் நடைபெறவுள்ள முதலீட்டாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்று அவர் உரையாற்றவுள்ளார்.*

*ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில், அயலக தமிழர் நலவாரியம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சியிலும் முதலமைச்சர் பங்கேற்கவுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

<<<<<<>>>>>>>>

*தமிழகத்தில், கடந்த நான்காண்டுகளில் 3 ஆயிரத்து 503 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். வரும் தை மாதத்திற்குள் இந்த எண்ணிக்கை 4 ஆயிரமாக அதிகரிக்கும் என்று அவர் கூறினார்.*

*திருக்கோவில்களில் கடந்த ஆண்டு வரை ஆயிரத்து 800 கட்டணமில்லா திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 537 தம்பதிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறையே சீர்வரிசைகளை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, கடந்த நான்காண்டுகளில் ஆயிரத்து 25 கோவில்களுக்கு சொந்தமான 7 ஆயிரத்து 846 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பிலான சுமார் 8 ஆயிரம் ஏக்கர் நிலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் திரு. சேகர்பாபு கூறினார்.*

*<<<<<<>>>>>>>>*

*தமிழகத்தில் வரும் திங்கட்கிழமை முதல், விவசாயிகளிடமிருந்து மாநில அரசு நெல் கொள்முதல் செய்யவுள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 545 ரூபாய்க்கும், பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதில் தமிழக அரசின் ஊக்கத்தொகையாக, சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 156 ரூபாயும், பொது ரக நெல்லுக்கு 131 ரூபாயும் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.*

*மாநிலத்தில் நேற்று வரை, 47 லட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>>>>*

*வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>>>*

*இருவரிச் செய்திகள்*

*இந்தியாவுக்கு எதிராக செயல்படும் லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹமது தீவிரவாத இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.*

*<<<<<<>>>>>>>>*

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள கூடுதல் வரி விதிப்பு சட்டவிரோதமானது என்று அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

<<<<<<>>>>>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஹிமாச்சலப்பிரதேசத்தில் போக்குவரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வர, மாநில அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

<<<<<<>>>>>>>>

உத்ராகண்ட் மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கித் தவித்த 21 குழந்தைகள் உட்பட 34 பேரை அம்மாநில பேரிடர் மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டனர்.

<<<<<<>>>>>>>>

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் விதைகள் இருப்பில் உள்ளது என்று ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>>

கரூர் மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது, அடுத்த 2 வாரங்களுக்குள் தீர்வு காண அதிகாரிகளுக்கு, ஆட்சியர் திரு. தங்கவேல் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>>

திருவள்ளூர் மாவட்டம், அரக்கோணம் அருகே நேற்று சரக்கு வாகனம் ஒன்று ஆட்டோ மீது மோதியதில் 2 பேர் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>>>>

சீமை கருவேல மரங்களை அகற்றுவது தொடர்பாக, 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>>>>

சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் கடந்த ஆண்டு பட்டம் பெற்ற 70 சதவீத மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளதாக அப்பல்கலைக் கழகம் தெரிவித்தள்ளது.

<<<<<<>>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

17 வயதுக்குபட்டோருக்கான தெற்காசிய மகளிர் இளையோர் கால்பந்துப் போட்டியில் இந்தியா 5-0 என்ற கோல்கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

திம்புவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெற்ற வெற்றியுடன் மொத்தமுள்ள 5 போட்டியிலும் வெற்றிபெற்று இந்தியா 15 புள்ளிகளை பெற்று, புள்ளி பட்டியலில் முதலிடத்தை பெற்றது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்தியா – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>>

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 7 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இதில், மகளிர் பிரிவில் 5 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களுடன் இந்தியா இறுதிப்போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது.

46, 60, 66 மற்றும் 80 கிலோ எடைப்பிரிவுகளில் இந்தியா கூடுதலாக வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இளையோர் குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியா வலுவாக உள்ளதை இது எடுத்துக்காட்டுகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<<>>>>>>>

தஜுகிஸ்தானில் நடைபெற்ற CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா நேற்று 2-1 என்ற கோல்கணக்கில் தஜுகிஸ்தானை வென்றது.

<<<<<<>>>>>>